TIRUVALLUVAR ORU PURADCIKKARAR

PARANI

031,1B6T:g
J4

திருவள்ளுவர்

— ஒரு புரட்சிக்காரர். —

எழுதியது :

" பரணி "

கஸ்தூரி பதிப்பகம்

உறையூர், :: திருச்சிராப்பள்ளி.

திருவள்ளுவர்

— ஒரு புரட்சிக்காரர்.

உரிமை பதிப்பகத்தாருடையது.

1954 விலை 0-6-0

Printed at Kasturi Press, Woriur, Tiruchirapalli (Phone 442)
Published by Kasturi Pathippagam, Woriur, Tiruchirapalli.

முன்னுரை

சமீப காலத்தில் இலக்கிய உலகில் அதிகமாகப் போற்றிப் பாராட்டப் படுவது குறளே. படித்தவரும், பாமரரும் ஒருங்கே சேர்ந்து குறளின் இனிமையைப் பருகப் போட்டியிடும் இக்காலத்தில் குறளைப்பற்றிய வித விதமான உரைகள் வெளிவந்தவண்ணம் இருப்பது ஆச்சரியப் படுவதற்கில்லை.

ஆனால் குறளின் ஆசிரியரைப்பற்றிச் சொல்லப்படும் கருத்துக்கள்தாம் விபரீதமாக இருக்கின்றன. எல்லா அரசியல் கட்சிகளும் குறளுக்கு அவர்களுக்குச் சாதகமான முறையில் அர்த்தங்களைக் கற்பிப்பதுடன் நில்லாமல் அதன் ஆசிரியரையும் தம்தம் போக்கிற்கேற்பக் கற்பனைசெய்ய ஆரம்பித்திருக்கின்றனர்.

தமிழ் மறை குறள். அதன் ஆசிரியர் ஒரு லௌகீக வாதி. அதே சமயத்தில் உளுத்துப்போன மனித சமுதாயத்தைத் தட்டி எழுப்பு வதற்கான விதிகளையும், சமூக நலனுக்கேற்ற ஆதாரண, பகுத்தறிவுக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய பண்புகளையும் ஒருங்கே திரட்டி அளித்திருக்கிறார் குறளில்.

பழையன கழியவும், புதியன புகவும் செய்யப்படும் மாறுபாடே புரட்சி. இக் கண்ணோட்டத்துடன் குறளைப் பார்க்கையில் திருவள்ளுவரை ஒரு புரட்சிக்காரர் என்று சொல்லாமல் இருக்கமுடியாது. இதை விளக்குவதே இச்சிறு நூலின் நோக்கம். இது நன்கு வரவேற்கப்படும் என்று நம்புகிறேன்.

படித்துப்பார்த்துத் தீர்ப்புக் கூறுங்கள்.

வணக்கம்.

ஆக்கியோன்.

பொருளடக்கம்.

1.	வள்ளுவர் யார்?	...	5
2.	இலக்கியப் புரட்சி	...	8
3.	அரசியல் புரட்சி	...	16
4.	சமுதாயப் புரட்சி	...	30
5.	வாழ்க்கையில் புரட்சி	...	38
6.	முடிவுரை ...	...	46

திருவள்ளுவர் ஒரு புரட்சிக்காரர்.

வள்ளுவர் யார்?

திருவள்ளுவர் ஒரு சிந்தனையாளர்; சீர்திருத்தக்காரர்; சமதர்மச் சித்தாந்தி; பகுத்தறிவுவாதி; புரட்சி வீரர்; ஆம், அவர் ஒரு புரட்சிக்காரரேதான்.

ஆனல்!

திருவள்ளுவரும், குறளும் ஆரம்பமுதல் இன்று வரை பல்வேறு கண்ணேட்டங்களுடன் நோக்கப்பட்டு வருகின்றன. வெவ்வேறு கோணங்களில் நின்று விமர்சிக்கப்படுகின்றன. வள்ளுவர் சமயவாதியா என்ற சந்தேகம் ஒருபுறம் சூடேறி வந்தாலும் வள்ளுவர் தங்கள் சமயத்தவரே என்று வெவ்வேறு சமயத்தவர்கள் சாதிக்கும் விசித்திரமும் ஓய்ந்தபாடில்லை.

சமயத்தோடு சர்ச்சை முடிவடைந்துவிடவில்லை. வள்ளுவர் குலம், பிறந்த இடம், வாழ்ந்தகாலம் பற்றிய விவாதங்கள் இன்னமும் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை. இவை பற்றி எழுந்த ஆராய்ச்சி நூல்கள் கோபுரமென உயர்ந்தன; குப்பையெனக் குவிந்தன. எல்லாம் சாதிச் சழக்கேறிய வாதம்; சமயநெறி மறந்த வெறிப் பேச்சு; பல சுயநலக் கோணங்களிலிருந்து வள்ளுவரைப் பார்க்க

முற்படுகின்றார்கள். பொதுமை நலனைக் கண்ணோட்டமாகக் கொண்டு வள்ளுவரைக்காண மறுக்கிறார்கள்.

வள்ளுவரை சாதிப்பற்று, சமயப்பற்று கொண்டு நோக்கினால் நமது அறியாமைப்பற்றுதான் வெளிப்படும். வள்ளுவரை ஒரு சமயவாதி என்று கூறினால் அது கேலிக் கூத்துதான். குறளை ஒரு சமயநூல் என்று வரையறுத் தால் அது வரட்டுவாதமே. இவர்கள் வள்ளுவரை அறியா தவர்கள் என்று கூறுவதைவிட அறியவிரும்பாதவர்கள் என்று தைரியமாகச் சொல்லலாம். திருக்குறள் சமயசாத் திரமன்று; சமுதாயப் பொதுநூல்.

வள்ளுவரை சமயச் சிமிழியில் அமுக்கி ஆழ்த்திவிட ஆத்திரப்படுகிறது இன்றைய ஆஸ்தீகக் கூட்டம். இல்லை, வள்ளுவர் இதற்கு நேர்மாறான கருத்துடையவர் என்று பலத்த கூக்குரலை எழுப்புகிறது மற்றொரு கும்பல். வள்ளுவரையும் அவர் குறளையும் தங்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவாகப் பயன்படுத்த முற்படும் முயற்சிகள் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இவர்களது போக்கும் நோக்கும் வள்ளுவரை மக்களிட மிருந்து பிரிப்பதற்கே பயன்படுகின்றனவென்பதை ஏனோ மறந்துவிடுகிறார்கள். வள்ளுவர் சமயவாதியுமல்ல; சம்சய வாதியுமில்லை; சமரச வாதி. சொல்லப்போனால் முதல்தர மான அரசியல்வாதி.

வள்ளுவர் ஒரு அரசியல் வாதியே என்ற நிர்ணயிப்பை உறுதிப்படுத்துவதற்கு நல்லவேளையாக அவர் ஆக்கித்தந்த அரிய நூல் நம்மிடமிருக்கிறது. குறளைக்கொண்டுதான் வள் ளுவரை உணரமுடியும்; உணரவேண்டும். சமூக, அரசியல், பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் குறளை நோக்கும்

பொழுது வள்ளுவர் ஒரு அரசியல்வாதியாகமட்டும் தென்படவில்லை; தலைசிறந்த ஒரு புரட்சிக்காரராகவும் தோன்றுகிறார்.

புரட்சிக்காரர்களென்றால் வெடிகுண்டு வீசுவோர் அல்லது வீரச்செயல் புரிவோர் என்றே பரவலாக நினைக்கப் படுகிறது. சமூக அமைப்பை அவசியமானபோது மாற்றி அமைக்க விரும்புகிறவர்கள் அத்தனைபேரும் புரட்சிக்காரர்களே. சட்டங்களின் மூலமோ, அல்லது பழக்கங்களின் மூலமோ உருவாகிய சமூக அமைப்பு மக்களின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்த முற்பட்டால் அந்த நிலையை மாற்றி அமைக்க சிலர் முனைகிறார்கள். இவர்களில் சிலர் வீரச்செயல் வாதங்களில் ஈடுபடலாம். சிலர் சொல்வன்மையைச் சாதனமாகக் கொள்ளலாம். வேறு சிலர் கலைத்துறையைக் கடைப்பிடிக்கலாம். வள்ளுவர் இலக்கியத்தைப் பயன்படுத்தினார்.

இலக்கியப் புரட்சி

நாட்டிலே நல்ல நினைப்புகளும் நிலையும் ஏற்படுவதற்கு இலக்கியத்தைப் பயன்படுத்துபவர்கள் முதல்தரமான புரட்சிக்காரர்கள். இலக்கியம் ஒரு பாசறை—புரட்சிக்கு முன் அறிவிப்பு. புரட்சி எல்லா நாடுகளிலும் ஒரே குறிக் கோளோடு நடப்பதில்லை. எங்கெந்த நாட்டில் எவை யெவை தேவைப்படுகின்றனவோ அவைகளுக்காகப் போராடுவதே புரட்சி.

இலக்கியக் கர்த்தாக்கள் பொதுஜன அணிவகுப்பில் முன்னணி வீரர்களாய் விளங்கவேண்டும். மக்களின் அபி விருத்திப்பாதை எது என்பதைக் காண்பிக்கவேண்டும். ஜனங்களின் சிந்தனையைச்சுடர்விட்டு இழையச்செய்யவேண் டும். இலக்கியம் சமூகத்திற்குப் பயன்படவேண்டும். அது மட்டுமல்ல அந்தக் காலங்களில் ஏற்படும் சிக்கலான பிரச்னை களுக்குத் தக்கபதிலைத் தெள்ளத்தெளிவாகத் தரவேண்டும். இவை போன்ற இன்றையப் புரட்சி உலக அபிலாஷைகளை வள்ளுவர் அதிசயிக்கத்தக்களவில் அன்றே தமது குறள் மூலம் நிறைவேற்றியுள்ளார்.

குறள் தோன்றிய காலம்:—

குறளின் குறிக்கோளை உருக்குலையாமல் உணர்ந்து கொள்ள அது தோன்றிய காலத்தை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். குறள் தோன்றிய காலத்தில் தமிழ் நாட்டின் நிலை எவ்வாறு இருந்தது? அந்தக் காலத்தை நம்

மனக்கண் முன் கொண்டுவந்து குறளை நோக்கினால் போதும். புரட்சிக் குமுறல்களைக் கேட்கலாம். தமிழ்நாடு திசைவழி தவறி, நிலைகலங்கித் தத்தளித்துக்கொண்டிருந்த ஒரு அபாயகரமான சூழ்நிலையில், நமது நாகரீகம், கலை, பண்பாடு, மனப்போக்கு, எண்ணம் இவை எல்லாமே கொந்தளிப்புற்றிருந்த * ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தில் குறள் முழங்கத் தொடங்கியிருக்கவேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் ஒருபுதிய நாகரீகம் குதிபோட்டுக் கொம்மாளங் கொட்டத் தொடங்கியது. படையெடுத்த புதிய நாகரீகம் தமிழகத்தின் சமூக வாழ்வையே தலைகீழாக மாற்ற முனைந்தது. அதன் தாக்குதல் தமிழகத்தையே திக்குமுக்காடச் செய்தது. பௌத்தக் கொள்கைகளும், சமணச் சித்தாந்தங்களும், ஆரியக் கோட்பாடுகளும், சூறாவளி வேகத்தில் பரவத் தொடங்கின. தனித்தன்மை பெற்றிருந்த தமிழன் எண்ணத்தையே தட்டி நொறுக்கித் தூக்கி எறிந்துவிடும் அளவிற்கு வலுப்பெறவும், வளம்பெறவும் ஆரம்பித்தன. இன்றும் இக்குறையைப் பூரணமாகச் சரிப்படுத்த இயலவில்லை.

இதுவரை இல்லறவாழ்க்கைக்கு ஏற்றம் தந்துவந்த தமிழ்நாடு துறவற வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க முனைந்தது. பெண் இனத்தைப் பெருமைப்படுத்தி வந்தவர்கள் பெண் குலத்தை இழிவாகக் கருத ஆரம்பித்தார்கள். ஆற்றலை நாடியவர்கள் அதிர்ஷ்டத்தை நம்பத் தொடங்கினர். நடைமுறை வாழ்வில் நாட்டங்கொண்டிருந்தவர்கள், மோட்ச சாம்ராஜ்யத்தில் மையல்கொள்ள ஆரம்பித்தனர். இகத்தைவிட்டுப் பரத்தை எட்டிப்பிடிக்கத் துடித்தனர்.

வீரத்தையும், காதலையும் விரும்பியவர்கள் கோழைத்தனத்தையும் கொடுமையையும் கையாளத் துணிந்தனர். சமத்துவத்தில் திளைத்தவர்கள் வர்க்க பேதத்திற்கு வரவேற்புக் கூற முனைந்தனர். சகோதரத்துவத்தை வற்புறுத்தியவர்கள் சாதிப்பிரிவுகளில் சாட ஆரம்பித்தனர். தன்னம்பிக்கையை விட்டுத் தத்துவங்களுக்குத் தாண்ட ஆரம்பித்தார்கள். முயற்சி மறைந்து, புகழ்ச்சி மலரத் தொடங்கியது. அன்பு மறைந்து, ஆதிக்கம் வேர்விட ஆரம்பித்தது. தொண்டனாக விளங்கிவந்த மன்னன் அதிபதியாக மாற ஆரம்பித்தான். பகுத்தறிவு மங்கியது. புரோகிதம் ஓங்கியது. ஏய்த்துப்பிழைக்கும் எத்தர் கூட்டம் போற்றுதலுக்கு ஆளாயிற்று. உழைத்து வாழும் உத்தமர் கூட்டம் உதாசீனத்திற்கு இலக்காயிற்று. சீர்குலைவுகள் எத்தனை எத்தனை உண்டோ அத்தனையும் தமிழ்மக்கள் வாழ்வில் தாவிப்படர்ந்து தளிர்விடத் தொடங்கின.

வினைத்திட்பத்தை விட்டு, விதிப்பயனை நம்ப ஆரம்பித்த பரிதாபகரமான நிலை, இந்தக் காலத்திலிருந்துதான் உருப்பெறத் தொடங்கியது. தனிப்பட்டோர் வாழ்க்கையிலும் சரி, சமுதாய வாழ்விலும் சரி, புதிய நாகரீகம் ஒரு பெரும் குழுறலைக் கிளறிவிட்டது. தாங்கள் கடைப்பிடித்துச் செல்லவேண்டிய வழிவகை எது என்று தெரியாமல் மக்கள் மயங்கித் திகைத்தனர். இந்தச் சூழ்நிலையில்தான் வள்ளுவர் தமது தீர்க்கமிருந்த கருத்துக்களை முழக்கத் தொடங்கினர்.

புதிய நாகரீகத்தின் அபாயத்தை வள்ளுவரைப் போன்று பலர் உணர்ந்துதான் இருந்திருப்பார்கள். ஆனால் உலகறியக் கூற முன்வரவில்லை. தங்கள் அறிவையும் ஆற்ற

லேயும் பயன்படுத்தத் தயங்கினார்கள். மக்களுக்கு சரியான வழிகாட்டத் தவறிவிட்டார்கள். இதற்கு முற்றிலும் விதி விலக்கானவர் வள்ளுவர். தமக்குச் சரியெனப்பட்ட உண்மைகளை, முன்னேற்றக் கருத்துக்களை, மக்கள் மத்தியில் மக்களுக்காக முழங்கிவந்தார். தமது போக்கும் நோக்கும் தமக்கு எத்தகைய விளைவைத் தருமோ என்ற தயக்கமும் அவரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. அன்றாடப் பிரச்னையிலிருந்து அரசியல் அமைப்புவரை அலசி ஆராய்ந்து தமது முடிவுகளைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். அவர் வெளியிட்ட இதயக்குமுறல்களின் தொகுப்பு தான் இன்று குறளாக நமக்குக் கிடைத்திருக்கும் கருவூலம்.

அன்றைய சூழ்நிலையில் குறள் ஒரு கொந்தளிப்பைக் கிளப்பியது. தமிழ் இலக்கிய உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. குறளின் போக்கும், நோக்கும் அப்போதையப் புலவர்களை அதிர்ச்சியுறச் செய்தன. குறளின் கருத்தும், கட்டுக்கோப்பும் புலவர்களைக் கிலிகொள்ளச் செய்தன. புலவர்களின் அதிர்ச்சியும், ஆத்திரமும், குறளைத் தாக்கும் அளவிற்குத் தடித்தன. அத்தோடு அவர்கள் நிற்க வில்லை. குறளை ஒரு இலக்கிய நூலாக ஏற்றுக்கொள்ளவும் தயங்கினார்கள். ஏன் மறுத்தார்கள்? புரையோடிக்கொண்டிருந்த சமுதாயத்தை சீர்ப்படுத்த முற்பட்ட குறள் இது போன்ற கண்ணோட்டத்துடன் நோக்கப்பட்டதில் ஆச்சரியமில்லைதான். இதுபோன்ற அனுபவத்தை ஒவ்வொரு அறிஞரும் ஒவ்வொரு முற்போக்கு நூலும் எதிர்நோக்கித் தான் ஆகவேண்டுமென்பதற்கு சரித்திரமே ஆதாரம். அப்படியிருக்கும்பொழுது வள்ளுவரும் குறளும் எப்படித் தப்ப முடியும்? ஆரம்பத்தில் தமிழ்ச் சங்கத்தில் குறளை அரங்

கேற்றவும் மறுக்கப்பட்டது. சங்க இலக்கியமாகத் திகழ அருகதையில்லை என்ற வாதம் கிளப்பப்பட்டதாகத் தெரிகிறது. ஔவையாரின் முயற்சியினால் தெய்வீக உதவி பெற்று, முடிவில் அரங்கேற்றப்பட்டதாக ஒரு கதை உலாவுகிறது. இந்தக் கதையின் உண்மையைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. இதிலிருந்து ஒரு உண்மை மட்டும் புலனாகிறது. அந்தக் காலத்தில் புலவர்களிடம் குறளுக்கு பலத்த எதிர்ப்பு இருந்திருக்கவேண்டும் என்பது மட்டும் உறுதி. இந்த உண்மையை முன் கூறிய கதை மெய்ப்பிக்கிறது போலும்!

குறளின் குறிக்கோள்:—

குறள் தோன்றிய காலத்திலும், பின்னரும் எத்தனையோ நூல்கள் வெளிவரத்தான்செய்தன. ஆனால் அவைகளில் ஒன்றுகூடக் குறளுக்கு நிகராக விளங்கவில்லை; விளங்கவும் முடியாது. குறளின் முற்போக்குக் கருத்தும், பொது நெறியும் அதன் தனிப்பெருமையாகும். எளியநடை அதன் தனிச் சிறப்பாகும். பொதுமக்கள் புரிந்துகொள்ளும் தன்மையிலுள்ளது குறள். அதே சமயத்தில் எந்த அறிஞரும் எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஏற்றமுடையது. இந்தப் பெருமை வேறு எந்த ஒரு நூலும் இன்றளவும் பெறவில்லை.

உரையின்றி வள்ளுவர் உள்ளத்தை எளிதில் நெருங்கிவிடலாம். அக்காலத்தில் வேறு நூல்களை நம் போன்றவர்களால் எட்டிக்கூடப் பார்க்க இயலாது; பண்டிதர்களால் தாம் முடியும். குறள் இதற்கு விதிவிலக்காக விளங்கி வருகிறது இன்றுவரை. இது போன்ற ஒப்பற்ற நூலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகிற்கு வழங்

கியவர் ஒரு தமிழ்ப் பெரியார் என்பதை நினைத்துத் தமிழினம் பெருமைப்படுவதற்கு நியாய முண்டு.

குறள் தோன்றிய வெகு காலத்திற்குப் பின்னரே அதற்கு உரைகள் தோன்றின. எல்லாத் துறைகளிலும் வைதீக மதம் வாழ்வு பெற்றிருந்த காலத்தில் ஒன்றோடொன்று மாறுபட்ட மதங்கள் தமிழ் நிலத்தில் மோதிக் கொண்டிருந்த சமயத்தில் குறளுக்கு உரைகள் இயற்றப் பட்டன. உரைகள் தோன்றிய காலத்தில் வள்ளுவர் தமது குறள் மூலம் வலியுறுத்திக் கண்டித்துள்ள கொள்கைகளும் கோட்பாடுகளும் தமிழகத்தில் வேர்விட்டன. தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரப்புவதற்கு உரையாசிரியர்கள் குறளைக்காட்டி வள்ளுவர் பெயரைப் பயன்படுத்திக்கொண்டனர், கௌதம புத்தரைப் பதினொன்றாவது அவதார மூர்த்தி என்று பிற்காலத்தில் கூறிக்கொண்டே அப்பெரியாரது ஒப்பற்ற போதனைகளை ஆழக் குழிதோண்டிப் புதைத்ததுபோல. குறளைப் பண்டிதர் நூலாக இதுவரை நம்மைக் கருதவைத்தது தான் அதன் உரைகள் செய்த கைங்கரியம். உரைகளின் உதவியின்றியே குறளை நெருங்க முடியுமென்ற நம்பிக்கை நாளுக்குநாள் வளர்ந்து வருவது மட்டுமல்ல, நடைமுறையிலும் நிகழ்ந்துவருகிறது.

திருக்குறள் ஒரு எச்சரிக்கை நூல். வாழ்க்கைப் பாதையை வரையறுத்து விளக்கம் தரும் ஒளி விளக்கு. சிந்தனையைத் தூண்டும் சுடர். சமுதாயத்திற்குரிய பொது சட்டத் தொகுப்பு. ஒழுங்கும் ஒழுக்கமும், அறிவும் ஆற்றலும் மக்கள் வாழ்க்கையில் ஆக்கம்பெற ஆக்கப்பட்ட அரியநூல். சாதி சமயப் பூசல்களின் சாயலே படாத மறுமலர்ச்சி நூல். ஜனசமூகத்தின் அத்தனை தேவைகளை

யும் ஒருங்கே ஆராய்ந்து ஜீவசக்தியுடன் அறிவுரை வழங்கும் முற்போக்கு நூல்.

திருக்குறள் 1330 பாட்டுக்களைக் கொண்டது. 12000 வார்த்தைகளைக் கொண்டது இந்நூல். நச்சுக் கொள்கைகளுக்கு வித்தாக விளங்கும் ஒரு சொற்கூடக் கிடையாது. சாதி, சமயம், சாமி, பூதம், ஆண்டான் அடிமை என்பன போன்றவார்த்தைகளைக் குறள் முழுவதிலும் தேடினும் எங்கும் காணமுடியாது. தன்மானம், தன்னம்பிக்கை, தைரியம், ஊக்கம், உழைப்பு, முயற்சி, அன்பு, அறிவு, ஆற்றல், ஆர்வம், வீரம், காதல் இவைகளின் எதிரொலிப்புகளும் பிரதிபலிப்புகளும்தாம் குறள் முழுவதிலும் முழக்கமிடுகின்றன. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் இவைகளின் அடிப்படையின் மீதே குறள் கட்டப்பட்டுள்ளது. வாழ்க்கைக்குத் தேவைப்படும் அத்தனை கருத்துக்களையும் குறளில் காணலாம். சமுதாய மேம்பாட்டிற்கு வேண்டிய வழிவகைகளைத் தமது அறிவுரைகள் மூலம் அப்பட்டமாக அறிவிக்கிறார் தனிப்பட்டோர் உயர்ந்தால், சமுதாயம் தானாக உயரும் என்ற தத்துவம் குறளில் துள்ளி விளையாடுகிறது.

ஒரு விவசாயி, ஒரு வியாபாரி; ஒரு இல்லறத்தான், ஒரு துறவி; ஒரு தலைவன், ஒரு தலைவி; ஒரு காதலன், ஒரு காதலி; ஒரு அரசன், ஒரு அமைச்சன்; ஒரு தொண்டன், ஒரு நண்பன்; ஒரு போர்வீரன் மற்றும் சகலருக்கும் குறளில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஒரு அரசு எவ்வாறு இயங்கவேண்டும், ஒருநாடு எப்படி இருக்கவேண்டுமென்று இடித்துக்கூறி சமுதாய சுபீட்சத்திற்குரிய வழிதுறை வகையைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார் வள்ளுவர்.

புகழ்ச்சியின் வாடையைக்கூடக் குறளில் காணமுடியாது. தன்மான ஒளியையும், பகுத்தறிவின் விளக்கத்தை

யும்தாம் காண்கிறோம். பொய் மெய்யாகவோ, அல்லது மெய் பொய்யாகவோ கூறப்படும்செப்படி வித்தைகளுக்குக் குறளில் இடமில்லை. எந்த ஒரு சக்திக்கும் அஞ்சாமல், எந்த ஒரு ஆதிக்கத்திற்கும் அடிமைப்படாமல், குறளின் மூலம் தமதுகருத்துக்களை, புரட்சிகரமான கொள்கைகளைக் கொட்டி முழக்கியுள்ளார். வள்ளுவரின் இந்த முயற்சியே நம் நாட்டில் தோன்றிய முதல் அறிவுப்புரட்சி.

அஞ்சாத நெஞ்சம்; அசையாத ஞானம்; ஆடாத கொள்கை; ஓடாத உறுதி; கோணாத குணங்கள்; கெஞ்சாத வாழ்க்கை; தளராத உழைப்பு; நாணாத செயல்கள்; தலைவணங்கா நடத்தை; தன்மானப்போக்கு இவைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது வள்ளுவர் வாழ்க்கை. இதற்கு இலக்கியமாகியது அவரது குறள். வள்ளுவர் வாழ்க்கை வரலாறே குறள். அவரது அனுபவங்களே இப் பெரு நூல்.

இன்றையப் புரட்சி உலகம் வேண்டி விரும்பும் கருத்துக்கள், கொள்கை கோட்பாடுகள், குறளில் குமிழ்விட்டுக் கொப்பளிப்பதைக் காண்கிறோம். குறள், வள்ளுவரை ஒரு புரட்சிக்காரராகவே பிரகடனப்படுத்துகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் தந்த செய்தி தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஒரு ஒளி. அது மக்களின் நல்வாழ்விற்கு ஒரு சரியான திசை வழிகாட்டியாக இன்றளவும் சுடர்விட்டுப் பிரகாசித்து வருகிறது. அதன் புரட்சிகரத்தன்மைக்கு இது ஒன்றே போதுமானது. மனிதன் மனிதனாக வாழவேண்டுமென்பதே குறளின் குறிக்கோள். வள்ளுவர் எழுத்திலே புதுமை! ஏட்டிலே புயல்! எண்ணத்திலே புரட்சி.

அரசியல் புரட்சி

அரசியலின் அடிப்படை:—

வெறும் மொழிப் புலமை மட்டும் கொண்டு குறளை நோக்கினால் கருதிய பலன் கிட்டாது. வள்ளுவர் உள்ளத்தை நெருங்க முடியாது. சமூக, அரசியல், பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் குறளை நெருங்கவேண்டும். அப்பொழுதுதான் வள்ளுவர் உள்ளத்தை உணரமுடியும். இந்தக் கோணத்திலிருந்து வள்ளுவரைப் பார்க்கும் பொழுது அவர் ஒரு புலவராகவோ அல்லது சமயவாதியாகவோ தென்படவில்லை. பேரறிஞராகத் தோன்றுகிறார். காரல்மார்க்ஸ், காந்தியடிகள், சாக்ரட்டீஸ் போன்ற பெரியார்களின் வரிசையில் வைத்துப் பார்க்கவேண்டும் வள்ளுவரை.

நல்ல அரசும் பொருளாதார சமத்துவமும் நாட்டில் நிலைபெற்றாலொழிய மக்கள் ஒழுக்கமும் உயர்வும் பெற்று இன்பவாழ்வை எட்ட இயலாது. அரசியலில் அடிக்கடி மாறக்கூடிய தன்மைவாய்ந்தவைகளில் வள்ளுவர் கருத்தைச் செலுத்தாமல் என்றென்றும் மாறாமல் நிற்கும் பொதுநெறிகளையே போதிக்கின்றார். அரசியல் அமைப்புக்கு வள்ளுவரின் பொருட்பால் நல்லதொரு வழிகாட்டி. பொருட்பால் அரசியல் அடிப்படைத் தத்துவங்களை ஆணித்தரமாக அறிவிக்கின்றது. இன்று முற்போக்குக் கொள்கைகள் என்று கூறப்படும் கருத்துக்கள் பொருட்பாலில் பொதிந்து கிடப்

பதைக் காணலாம். இது போன்ற எண்ணம் வள்ளுவர் உள்ளத்தில் அன்றே எப்படி எழுந்ததோ என்ற ஆச்சரியம் எவருக்கும் எழுந்துதான் ஆகவேண்டும். அவ்வளவு அற்புதமாக அரசியல் சாத்திரத்தை ஆராய்ந்திருக்கிறார். அது மட்டுமல்ல அரசும் அரசியலும் இப்படித்தான் இயங்க வேண்டுமென்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார். அரசனுக்குரிய தகுதியையும் அவன் ஆற்றவேண்டிய கடமைகளையும் இருபத்தைந்து அதிகாரங்களில் தெளிவாகத் தருகிறார்.

மன்னன் கடவுளா?

அரசன் கடவுளின் அம்சம் என்பது வள்ளுவர் காலத்திய மக்களின் பொதுவான நம்பிக்கை. மன்னனைக் கடவுளாக்கியவர்கள், அதைப்பிறப்பு வழிப்பட்ட உண்மையாகவே கருதினர். ஆனால் வள்ளுவரோ அது செயலையொட்டிய சிறப்பாகவே இருக்கவேண்டுமென்று அழுத்தமாக அறிவித்தார். இன்று வேண்டுமானால் இந்தத் திருத்தம் அலட்சியமாகத் தோன்றலாம்; அற்பமாகத் தெரியலாம். ஆனால் வள்ளுவர் காலத்தில் மன்னனைப்பற்றி ஒரு முடிவு கூறுவதென்பது சாதாரண மனிதர்களால் மனதாலும் நினைக்கமுடியாத செய்கையாகும்.

மன்னன் தவறு செய்வதே இல்லை என்ற மூட நம்பிக்கை முடிசூட்டி ஆண்ட அக்காலத்தில், மன்னன் தவறு செய்யக்கூடும் என்று முதன்முதலாக அறிவுறுத்திய பெருமை வள்ளுவருக்கே உரியது. முடியாட்சிமுறை அங்கீகரிக்கப்பட்டாலும் அதற்கும் ஒரு முடிவு உண்டு என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

இறைகடியன் என்றுரைக்கும் இன்னச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

என்ற குறள் தனியொரு கொடுங்கோலனின் அழிவைமட்டு மன்றி வழிவழி கொடுங்கோலரின் அழிவையும் அறிவிப்ப தாகும். மன்னன் தவறு செய்யக்கூடும் என்ற அடிப்படை யிலேயே திருக்குறள் அரசு அமைந்திருக்கிறது. "செங் கோன்மை","வெருவந்த செய்யாமை"என்ற அதிகாரங்களை வைத்திருப்பதே இதற்கு ஆதாரமாகும்.

குறள் கூறும் அரசு, அரசனையே தலைவனாகக்கொண்டு இயங்குகிறது. ஆனால் அரசனுடைய உரிமைகளைக் கூறவே இல்லை என்பது கவனிக்கத்தக்கது. அவனுடைய கடமை களை மட்டுமே வற்புறுத்துகிறது. ஆகவே வள்ளுவர் வகுத்த அரசுமுறை முடியரசுக்கே யன்றிக் குடியரசுக்கும் பொருந்தும். முடியரசுக்கும் குடியரசுக்கும் உள்ள வேற் றுமையெல்லாம் ஆளுவோரின் உரிமையைப்பொறுத்ததே; கடமையைப் பொறுத்ததன்று. எல்லா அரசுக்கும் கடமை பொதுப் பண்பாகும். முடியரசு இல்லாத நாடுகளில் "ஜனாதிபதி", "சர்வாதிகாரி" என்ற பெயர்களால் தனி மனிதர்களே அரசாங்கத் தலைவர்களாக இருந்துவரக் காண்கிறோம். குறளில் வரும் அரசனை, அரசாங்கத்தலைவன் என்று கருதுவோமானால் பொருட்பால் போதிக்கும் அரசி யல் உலகநாடுகள் அனைத்திற்கும் இன்றைய சூழ்நிலையிலும் பொருந்திவருவதைக் காணமுடியும்.

சமயச் சார்பற்ற அரசு:—

சமயச் சார்பற்ற அரசாங்கமே ஒரு சீரிய அரசு என்று இன்று கருதப்படுகிறது. சமயங்களை ஆதரிப்பதோ அல்லது எதிர்ப்பதோ அரசாங்கத்தின் கடமையாக இருக்

கக் கூடாதென்று புரட்சி உலகம் கூறுகிறது. இன்று நமது நாடு உலகில் தனக்கென ஒரு உயரிய அந்தஸ்தைப் பெற்றிருப்பதற்கு அதன் சமயச் சார்பற்ற கொள்கை ஒரு முக்கிய காரணமாகும். அரசியலையும் மதத்தையும் குழப்பக்கூடாது. அரசியல் வேறு, மதம் வேறு என்ற முடிவில் ஒவ்வொரு அரசும் இயங்கவேண்டுமென்பதே முற்போக்கு மக்கள் விரும்புவது. இந்தத் தீவிரமான கருத்தை வள்ளுவரிடம் தெள்ளத் தெளிவாகக் காண்கிறோம். அரசியலுக்கும் மதத்திற்கும் இருக்கவேண்டிய சம்பந்தத்தை வரையறுக்கும் வள்ளுவர் பொதுமை பெருமைப்படத்தக்கது. வள்ளுவர் பெருமைக்கு அவர் பொதுமைக் குணம் ஒன்றே போதுமானது.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

என்ற குறளால் சமயச் சார்பற்ற கொள்கையே ஒரு உயரிய அரசுக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்பதை அறிகிறோம். சமயத்திற்கு அப்பாற்பட்டது அரசு என்று அப்பட்டமாக அறிவிக்கிறார் வள்ளுவர்.

அரசின் அங்கங்கள்:—

அரசுக்குரிய அங்கங்கள் பல. அவைகளை முப்பத்திரண்டு அதிகாரங்களில் விளக்குகின்றார். அவற்றுள் முக்கியமானவை படை—குடி—பொருள்—அமைச்சு—நட்பு—அரண் ஆகியனவாம்.

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

என்ற குறள் இதையே வற்புறுத்துகிறது. இந்த ஆறு அங்கங்களில் ஒன்று குறையினும் அந்த அரசு வலிமை

யற்றதாகும்; வாழ்விழக்கும். "சூழ்" என்பது பொருளையும் "நட்பு" என்பது நேசநாடுகளையும் குறிப்பதாகும். இந்தக் கருத்துடன் நோக்கும்பொழுது இன்றும் ஒவ்வொரு நாட்டிற்கும் இந்தக் குறள் எவ்வளவு பொருத்தமுடையதென்பது கவனிக்கத்தக்கது.

இன்றைய நிலையில் எந்த ஒரு நாடும் தனித்து இயங்க முடியாது. இதனால்தான் ஒவ்வொரு நாடும் தன் நேசமுறையை வளப்படுத்த வேற்று நாடுகளுடன் நட்புரிமை கொண்டாடுகின்றது. ஸ்தானீகர்களைப் பரிமாறிக்கொள்கின்றது. ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு நேர்மையான நாட்டின் நேசம் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று என்று அன்று வள்ளுவர் வரையறுத்தார். அது இன்றும் மீற முடியாத உண்மையாக விளங்கிவருவதற்கு இன்றைய உலகப் போக்கே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஒரு நாட்டின் நல்வாழ்வு அது எத்தகைய நாட்டுடன் நேச உறவு கொண்டுள்ளது என்பதைப் பொறுத்தது. இந்த உண்மையை இன்று நிதர்சனமாகப் பார்க்கிறோம்.

அமைச்சர் அவை:—

அமைச்சர் குழுவை அரசுக்குரிய அங்கங்களில் ஒன்றாகக் கருதுகிறார் வள்ளுவர். அதற்குத் தனி அந்தஸ்தைத் தருகிறார். படை இல்லாமல் எப்படி ஒரு நாட்டின் பாதுகாப்பு இல்லையோ, அது போன்றே அமைச்சு இல்லாமலும் ஒரு நாட்டின் அரசு இயங்கமுடியாது. ஆம், அரசாங்கத் தலைவனை அடுத்து முக்கியத்துவம் பெறுபவர் அமைச்சரே என்பதை இன்றைய அரசியலிலும் நாம் காண்கிறோமல்லவா?

வள்ளுவர் விருப்பப்படி அல்லது வழிப்படி அமைச்சர்கள் நமக்கு அமைந்திருந்தால் நாம் இவ்வளவு அவல நிலேக்கு ஆளாகவேண்டியதிருக்காது. இப்போதைய அமைச்சர்களே வள்ளுவம் என்னும் உரைகல்லில் உரைத்துப்பார்த்தால் உண்மையில் நாம் வெட்கித் தலேகுனியத்தான்வேண்டும். அமைச்சர்களுக்குரிய அத்தியாவசியத் தேவைகளின் அடையாளங்களேக்கூட அவர்களிடம் காண முடிகிறதா என்பது கேள்விக்குரியது.

இன்று, யார்வேண்டுமானுலும், எப்பொழுதுவேண்டுமானுலும், எப்படிவேண்டுமானுலும் அமைச்சர்களாக வர முடியும். ஆனுல் வள்ளுவரோ அமைச்சர்களுக்கு இன்ன யோக்கியதை வேண்டுமென்று தெளிவாக இலக்கணம் வகுத்திருக்கிருர். அதற்கு அருகதை யற்றவர்கள் அமைச்சர்களாகவந்து நாடாண்டால் விளேவுகள் எவ்வாறு இருக்குமென்பதை இப்பொழுது நாம் நேரடியாகப் பார்க்கிருேமல்லவா?

ஒருவரது அறிவு ஆற்றல்களே ஆராய்ந்து, அவர் தகுதியுடையவரா என்பதைத்தெரிந்து அவரை அமைச்சராகக் கொள்ளவேண்டுமென்று வள்ளுவர் கூறுகிருர், **'தேருது யாரையும் தேறற்க'** என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிருர்

இதனே இதனுல் இவன்முடிக்கும் என்ருய்ந்து
அதனே அவன்கண் விடல்.

ஒருவர் எந்தத் துறையில் ஆற்றலுடையவர் என்பதை ஆராய்ந்து, அந்தத் துறைக்குரிய பொறுப்பைமட்டுமே அவரிடம் ஒப்புவிக்கவேண்டும். அரசியல் பாணியில் கூறினுல், தலேமை அமைச்சர் இலாக்காக்களேப் பிரித்துக்கொடுக்

குங்கால் அவரவர் திறமைக்கேற்ற இலாக்காக்களைக் கொடுக்கவேண்டும். அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் மக்களுக்கு இதில் மிகுந்த பொறுப்புண்டு என்பதை ஏனோ மறந்துவிடுகிறார்கள்.

> வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
> அதற்குரிய னாகச் செயல்.

அமைச்சரிடம் ஒரு பொறுப்பை ஒப்புவித்த பின்னர் அதன் முழு அதிகாரத்தையும் அவருக்கு உரிமையாக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் தனது ஆற்றல் முழுவதையும் வெளிப்படுத்த இயலும்.

மன்னனும் மக்களும்:—

பொதுவாக அரசன், மக்கள் காண்பதற்கு அரியவனாகவே இன்றும் இருந்துவருகின்றான். தெய்வபக்திக்கு நிகர் அரசபக்தி என்கிறது முடியரசுக்கொள்கை. இதற்கு நேர் மாறாகக் குடியரசுத் தலைவன் நிலையில் முடி மன்னனை வைக்கிறார் வள்ளுவர். மக்கள் காணவிரும்பியபோதெல்லாம் அரசன் எளிதில் காட்சியளிக்கவேண்டும். மக்களிடம் கடுஞ்சொல் வழங்கக்கூடாது. அன்புடனும், இன்புடனும், பண்புடனும் மக்களுடன் மன்னன் பழகவேண்டுமென்று பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கிறார்.

> காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
> மீக்கூறும் மன்னன் நிலம்.

> செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
> கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

என்ற குறட்பாக்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இன்றைய ஜனநாயகக் குடியரசு நாடுகளிலும், சட்டப் படிக் குடியரசின் தலைமைப் பீடமே அதிகாரங்கள் அனைத்துக்கும் உறைவிடம். அதுபோல அரசனையே அரசாங்கக் காரியங்கள் அனைத்திற்கும் அதிகாரியாக்குகின்றது குறள். ஆனால் அரசனுக்கு அவ்வப்போது ஆலோசனைகூற, அரசனுடைய அனுமதிப்படி அரசாங்கக் காரியங்களைக் கவனிக்க, அமைச்சர் குழு அமைவதற்கு அதி முக்கியத்துவம் தருகிறார் வள்ளுவர். சட்டப்படி அமைச்சர்கள் அரசனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளே என்றாலும், சம்பிரதாயப் படி அவர்கள் தாம் நாட்டை ஆள்வோர்கள் என்பதை

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

என்ற குறள் மூலம் வள்ளுவர் சூசகமாகத் தெரிவிக்கிறார். அரசன், தன்னைச் சூழ்ந்துள்ள அமைச்சர்களைக் கண்ணாகக் கொண்டு, அவர்களது ஆலோசனையைப்பெறக் கடமைப் பட்டவன் என்பதே இக்குறளின் பொருள்.

பொறுப்பை மறந்து, தங்கள் கடமையை நிறைவேற்றாது, ஆண்டவன் மீது பழிசுமத்தும் சில அரசியல்வாதிகளுக்கும் அமைச்சர்களுக்கும் சரியான அடி கொடுக்கிறார் வள்ளுவர்.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்.
காவலன் காவான் எனின்

என்ற குறட்பாக்களில், இயற்கையாலும் செயற்கையாலும் நேரும் தீங்குகள் அனைத்திற்கும், அரசனே (அரசாங்கத் தலைவனே) பொறுப்பேற்கவேண்டும் என்று வலியுறுத்து

கிறார். இன்று வள்ளுவர் உயிருடன் வந்தால் இயற்கையின் கொடுமைக்கு நாங்கள் என்ன செய்யமுடியுமென்று கையை விரிக்கும் அரசியல்வாதிகளைப் பார்த்து என்ன நினைப்பாரோ ?

மக்கள் தீர்ப்பு:—

கொடுங்கோல் அரசன் அழிவான்—அழியவும்வேண்டும் என்று வள்ளுவர் அறுதியிட்டுக் கூறுகிறார். கொடுங்கோல் தோன்றியவிடத்து அக்கொடுங்கோலை எதிர்த்து மக்கள் கூக்குரல் கிளம்பும். அந்தக் கிளர்ச்சியே அரசை அழிக்கும் என்று குறிப்பிடுகிறார்.

இறைகடியன் என்றுரைக்கும் இன்னுச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

என்ற குறள் மக்களின் அதிருப்தியே அக்கொடுங்கோலை அழித்துவிடும் எனக் கூறுகிறது.

அல்லல்பட்டு ஆற்றுது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்ற குறள் ஜனசக்தியின் வலிமையைப் பிரகடனப் படுத்துகிறது. கொடுங்கோல் அரசை எதிர்க்கும் அதிகாரம் மக்களுக்கு உண்டு என்ற தீர்ப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உரிமையுடன் முழங்கிய வள்ளுவர் புரட்சிக்காரராக அன்றி வேறு எவராக இருக்கமுடியும்? அரண்மனைதான் அரசியலை வகுக்கவேண்டுமென்ற நிலைக்கு மாறுக மக்களுக்கும் அரசியலை நிர்ணயிக்கும் உரிமை உண்டு என்று முதன்முதலாக வற்புறுத்தியவர் வள்ளுவரே.

எது நல்ல நாடு?

நாடு என்ற சொல் வெறும் நிலத்தையும் மக்களையும் மட்டும் குறிப்பதல்ல. நாட்டிற்கு வேறு சில இன்றியமையாத அம்சங்களும் தேவை என்றார் வள்ளுவர். இதை இன்றும் அலட்சியப்படுத்த முடியாது. விளைபொருள்கள் குறையாமல் இருக்கவேண்டும். உணவுப் பொருள்கள் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க வழிசெய்யவேண்டும். இதோடு கேடில்லாத செல்வம் உடையவர்களும் வேண்டும். இதுமட்டும் போதாது. தக்க அறிஞர்களும் தேவை. எந்த நாடு இவைகளைப் பெற்றிருக்கிறதோ அதுதான் நாடு என்று கூறத்தகுந்த யோக்கியதை உடையது. ஒரு நல்ல நாட்டிற்குரிய இலக்கணங்களை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறுகிறார்.

செல்வம் உடையவர்கள் நாட்டுக்குத் தேவை என்று கூற வந்த வள்ளுவர், கேடில்லாத செல்வம் உடையவரே வேண்டுமென்று கூறுவது கவனிக்கத்தக்கது. செல்வம் கேடு விளைவிப்பதாக இருக்கக்கூடாது. நாட்டு வளப்பத்திற்குப் பயன்படவேண்டும். உழைப்பை உறிஞ்சுவதற்கு உபயோகப்படக்கூடாது. அப்பொழுதுதான் அந்தச் செல்வம் கேடில்லாத செல்வமாக முடியும். அது சுரண்டலற்ற ஒரு சமூக அமைப்பில்தான் சாத்தியமாக முடியும்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

இந்தக் குறளை ஒரு அரசியல் சூத்திரமென்றே கூறவேண்டும். எவ்வளவு விரிவான வியாக்கியானமும் தரலாம், அவ்வளவு அர்த்தபுஷ்டியைக் கொண்டுள்ளது. இதுவரை

வெளிவந்த அறிஞர்களது அரசியல் நூல்கள் அத்தனையும் இந்த ஒரு குறளின் விரிவுரை எனலாம்.

வள்ளுவரின் இந்தக் குறளுக்கு எடுத்துக்காட்டாக எந்த ஒரு நாட்டையாவது இன்று கூறமுடிகிறதா? ஜனநாயக ஆட்சி என்று பலத்த ஆரவாரம் செய்யப்பட்டுவரும் நாடுகளில் பஞ்சமும் பற்றுக்குறையும் ஒழிந்துவிட்டனவா? அல்லது அங்கு கேடில்லாத செல்வம்தான் காணப்படுகிறதா? விட்டுவிடுவோம். சர்வாதிகார நாடுகளிலாவது வள்ளுவர் விருப்பம் நிறைவேறியுள்ளதா என்று ஆராய்ந்தால் ஆயாசம்தான் மேலிடுகிறது. உணவைப் பெருக்கும் உழவர்கள், ஊராளுந்திறனுடைய அறிஞர்கள், திரவியம் தேடும் வணிகர்கள், இவர்கள் ஏற்றத்தாழ்வில்லாமல் கூட்டுமுறையில் இயங்கவேண்டும். இவர்கள் கூட்டுக் கலப்பின் கனவை நனவாக்கும் நாடே நல்ல நாடு.

பொருளாதார ஏற்றத் தாழ்வின்றி நாட்டின் செல்வத்தை மக்கள் அனைவரும் சமமாக அடையவேண்டுமென்ற தமது ஆர்வத்தைத் "தாழ்விலாச் செல்வர்" என்ற வார்த்தையின்மூலம் சூசகமாகத் தெரிவிக்கிறார். எல்லாரும் செல்வர் என்ற நிலையுடைய நிலமே நல்ல நாடு என்பதே வள்ளுவர் தீர்ப்பு. நிலவளம், தொழில்வளம், அறிவு வளம் ஆகிய மூன்றும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவை என்பது வள்ளுவர் நிர்ணயிப்பு.

எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாருமில்லை உடையார்களுமில்லை

என்று கம்பர் கூறுவதை மேற்சொன்ன குறளுக்கு விளக்கவுரை எனலாம்.

தீய சக்திகள்:—

நாட்டு நலத்திற்கு எவை எவை தேவை என்று கூறிய வள்ளுவர், எவை எவை தீமை விளைவிப்பன என்றுங் குறிப்பிடுகிறார். அத் தீயசக்திகளை யெல்லாம் நாட்டை விட்டு விரட்டியடிக்கவேண்டுமென்று அறைகூவுகிறார். பகை இருவகைப்படும். ஒன்று உட்பகை, மற்றொன்று புறப்பகை. சாதி, சமய, கட்சி வேற்றுமைகளால் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து போரிடுவதை உட்பகை எனலாம். இந்த உட்பகைக்கு நிலைக்களமாக விளங்கும் நிலம் நாடன்று. உருவத்தால் பல கோடியினராயினும், உள்ளத்தால் ஒருவரே என்ற நிலை நாட்டில் உருப்பெறவேண்டும். அப்பொழுது தான் நாடு மாண்புடன் விளங்கமுடியும். மற்றும் அராஜகச் செயல்களாலும் ஒரு நாடு தனது சிறப்புக்குன்றி சீரழியும். இந்த உண்மைகளை,

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு

என்ற குறள் நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது.

சாதிகள் பெயராலும், சமயங்கள் பேராலும் தோன்றிய பல கூட்டங்கள், அழிவுசெய்யும் ஐந்தாம்படை, கொடுமை மிகுந்த குறுநில மன்னர்கள் இவர்கள் எந்த நாட்டில் ஆக்கம் பெறுகின்றனரோ அங்கு முன்னேற்றத்தைக் காணமுடியாது. மனப்புழுக்கத்துடன் வள்ளுவர் வெளியிடும் இந்த உண்மைகளின் விளைவுகளை இன்று நம் நாட்டில் கண்கூடாகக் காண்கிறோம், ஓரளவிற்கு.

பசியும் பிணியும்:—

பசி யென்ற பேச்சே ஒரு நாட்டில் இருக்கக்கூடாது. பசியும் பிணியும் கூத்தாடும் நிலத்தை நாடு என்று எப்படி

அழைப்பது என்று ஆத்திரப்படுகிறார் வள்ளுவர். மரண பயம் மனிதனுக்கு இருக்கக்கூடாதுதான். ஆனால் அவன் பசியினால் மடியக்கூடாது. பசி என்ற சொல் அவ்வளவு ஆத்திரப்படவேண்டிய விஷயம். அடங்காப்பசி, தீராப் பிணி, அழிக்கமுடியாத புறப்பகை இவைகள் இல்லாததே நாடு.

> உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
> சேரா தியல்வது நாடு.

இன்று நம் நாட்டில் எல்லாருடைய கண்களையும் கருத்தையும் கவர்ந்துநிற்பது உணவுப் பஞ்சம். பசிக்கொடுமை மக்களை நெருப்புச் சட்டியில் புழுவைப்போல் வறுத்துக் கொண்டிருக்கிறது. நாள் தவறினாலும் பட்டினிச் சாவு தவறுவதில்லை. ஒரு நாட்டில் மக்கள் நோய் நொடியால் பிடிக்கப்படக்கூடாது. வறுமை இருக்கக்கூடாது. பகைவரிடமிருந்து பாதுகாப்புக்கு உத்திரவாதம் வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாம் துன்பமயம் என்ற நிலை ஏற்படாமல் மக்களிடம்இன்பவாழ்வு மலர வேண்டும்.

> பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
> அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

இந்த நிலை நடைமுறையில் எந்த ஒரு நிலத்தில் நிலவுகிறதோ அதுவே நல்ல நாடு. பசி, பிணி, பஞ்சம், ஆகியவை தலைவிரித்தாடும்போது எமது நாட்டுக்கு எந்தநாடு ஈடு என்று கூறுவதெல்லாம் வெறுங் கேலிக்கூத்தே. வள்ளுவரின் புரட்சிகரமான கருத்துக்களைப் பிரதிபலிக்கும் ஒரு

நாட்டைக்கூட இன்று காணமுடியவில்லை. வள்ளுவர் விரும்பும் நாடு இனிமேல்தான் உருவாகவேண்டும். வள்ளுவத்தின் பூரணத்துவத்தை இன்று எந்த ஒரு நாடும் பெற்றிருக்கவில்லை. வள்ளுவரின் தீர்க்கதரிசனத்தைக் குறளை அளித்த தமிழ் நாட்டிலாவது நிதர்சனமாக்க முயல வேண்டும்.

சமுதாயப் புரட்சி

இன்ப வாழ்வு பொங்கவேண்டுமென்று கூறும் வள்ளுவர் அது காரியசாத்தியமாவதற்கு சமுதாயப் போக்கு எப்படி இருக்கவேண்டுமென்று வழி வகுத்துள்ளார்.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

சிந்தனையைத் தூண்டும் இந்தக் குறள் உணர்ச்சியைக் கிளறுகிறது. பழிக்கு அஞ்சிப் பொருள்சேர்க்கவேண்டும். செலவு செய்யப்படும்பொழுது பகுத்து உண்பது மேற்கொள்ளப் படவேண்டும். இந்த முறை கையாளப்பட்டால் சமுதாய வாழ்வின் ஒழுங்கு (Order) ஒருபோதும் கெடமுடியாது. பழியஞ்சிப் பொருள்சேர்ப்பது எப்பொழுது, அல்லது எந்த ஒரு சமூக அமைப்பில் சாத்தியப்படுமென்பது சிந்தனைக்குரியது. உழையாதவன் உண்ண உரிமையற்றவன். கடமையை மறந்து உரிமைகொண்டாட முற்படக்கூடாது. அவரவர் கடமையை மனப்பூர்வமாக நிறைவேற்ற முன்வர வேண்டும்.

ஏற்றத் தாழ்வு ஏன் ?

சமுதாய வாழ்வில் ஏற்றத்தாழ்வு என்ற எண்ணத்திற்கே இடமிருக்கக்கூடாதென்பது வள்ளுவர் கொள்கை. சாதியிலானாலும், சமயத்திலானாலும் அல்லது வேறு எவ்

வகையிலானாலும் சரி உயர்வு, தாழ்வு என்ற மனப்பான்மை கூடாது என்பதே குறளின் கோட்பாடு. உயர்வு, தாழ்வு என்ற சாயலைக்கூடக் குறளில் காணமுடியாது.ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் மடமையைத் தமது முழுமூச்சுடன் எதிர்க்கிறார். சமத்துவத்தின் மேன்மையை, அவசியத்தை, அழுத்தமாக வற்புறுத்துகிறார் வள்ளுவர். உயர்ந்தோர் — தாழ்ந்தோர் தத்துவத்தைத் தட்டி நொறுக்கும்பொழுதுகூட சாதி என்ற சொல்லைக் கையாளவில்லை. எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் என்ற கோஷங்கள் இன்று முற்போக்கானவை என்று கருதப்படுகின்றன; தீவிரவாதமென்று நினைக்கப்படுகின்றன. அறிவுப்புரட்சி என்று அமர்க்களப்படுத்தப் படுகின்றன. இதே கொள்கைகளை,ஏன் அதிமுற்போக்கான கோட்பாடுகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முரசு கொட்டி முழங்கியிருக்கிறார் வள்ளுவர்; 'பிறப்பொக்கும்' என்று கூறி மக்கள் எல்லோரும் சமம் என்ற கொள்கையை நிலைநாட்டுகிறார். உயர்வு தாழ்வுத் தத்துவத்தை நிலைநாட்ட விரும்பி, "கர்மம்" என்ற கேடயத்தைப் பயன்படுத்துவோருக்குச் சாட்டையடி கொடுக்கிறார்.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

பல்லக்கில் இருப்பவனையும் அதைச் சுமந்துசெல்பவனையும் பார்த்து அது அறத்தின் பயன் என்று அசட்டுத்தனமாகக் கூறாதீர் என்று கூவுகிறார்.

வறுமை கொடியது:—

சமுதாயத்தில் நல்ல நினைப்புகள் வளரவேண்டுமானால், வளம்பெறவேண்டுமானால், நல்ல நிலை நிலவவேண்டும்.

நிலை இன்றேல் நினைப்பில்லை. வறுமையின்முன் கொள்கையும் கோட்பாடும் வலிகுன்றும். வளம்பெறமுடியா. அடிப்படையான கொள்கைகள் சமுதாய வாழ்வில் வளம் பெறவேண்டுமானால் வறுமை ஒழியவேண்டும். வறுமை மனிதனுடைய முதுகைமட்டும் கூனலாக்குவதில்லை, அறிவையுங்கூடக் கோணலாக்கிவிடுகிறது. ஆத்மா அழிவற்றதாக இருக்கலாம்; கலைகள் நித்திய சௌந்தரியமாக இருக்கலாம்; பிரபஞ்சம் தெய்வத்திருக்கூத்தாக இருக்கலாம். எல்லாம் வறுமையில்லாதபோதுதான். வறுமைக்கு நிகர் வறுமைதான். வேறு உவமை கூறமுடியாது.

வறுமையின் கொடுமையை எத்தனையோ பேர் உணர்ச்சியுடன் எடுத்துக் கூறியிருக்கின்றனர். ஆனால் வள்ளுவரோ வறுமை என்ற சொல்லே நாட்டிலிருந்து ஒழியவேண்டுமென்கிறார். கொலைகாரனைவிட வறுமை கொடியது என்று குமுறுகிறார். வறுமையுடன் வாழ்வது நெருப்பில் துயில்வதை ஒக்கும் என்று துடிக்கிறார்.

இல்லை என்ற சொல்லைக் கேட்கும்பொழுதே உயிர் போகின்றதே, ஆனால் தேவைக்கு அதிகமாகப்பெற்றிருப்போர் தேவைப்படுபவர்களுக்கு "இல்லை" என்று கூறுகிறார்களே, அவர்களெல்லாம் மாண்டு மடியாமல் எப்படித்தான் உயிர்வாழ்கின்றார்களோ! அவர்கள் உயிர் எங்குதான் ஒளிந்திருக்குமோ என்று ஆத்திரப்படுகிறார்.

கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.

இல்லை என்று ஏங்காதே.

வள்ளுவர் நூலை காரல்மார்க்ஸ் படித்திருந்தால் தாம் கண்ட கொள்கை குறளில் கருக்கொண்டிருப்பதைக் கண்டி

ருப்பார். தமது கொள்கை தமக்கு முன்பே தமிழகத்தில் விதையிடப்பட்ட தென்பதைத் தெரிந்துகொண்டிருப்பார்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

என்ற குறளின் விரிவுரை எனலாம் காரல்மார்க்ஸ் இயற்றிய மூலதனம் (Capital) எனும் புகழ்பெற்ற நூல்.

வறுமையைப் பற்றித்தான் இன்று உலகில் அதிகமாகப் பேசப்படுகிறது, எழுதப்படுகிறது, முதலைக்கண்ணீர் விடப்படுகிறது. வறுமையைப் போக்கப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்படுகின்றன. படாடோபமான பிரசாரமும் நடைபெறுகிறது. வறுமையைக் காரணமாகக்காட்டி, துவேஷமும் வளர்க்கப்படுகிறது ஒரு சாராரால். எல்லோரும் விரும்பும் வண்ணம் இந்த வறுமையை ஒழிப்பதுதான் எப்படி? இதற்குக் காரியசாத்தியமான வழியைக் காட்டுகிறார் வள்ளுவர்.

இல்லையென்று கூறும் மக்களே இல்லாமல்போவதற்கு நிலம் என்னும் மங்கை தயாராகக் காத்துக்கொண்டிருக்கும்பொழுது அதைப் பயன்படுத்திக்கொள்ள முன்வராமல் முழங்காலைக் கட்டிக்கொண்டிருந்தால் ஏன் வறுமை வாட்டாது என்று கேட்கிறார்.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

மக்கள் அறியாமையைக் கண்டு கொதிப்படைகிறார். இல்லை என்று ஏங்காதீர். இருக்கும் நிலத்தில் பாடுபடுங்கள் என்று உழவர்களைக் கூவி அழைக்கிறார். இந்த

அறைகூவலில் இன்றைய நிலச் சீர்திருத்தக் கருத்துக்கள் குமிழ்விடுவதைக் காண்கிறோம்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்

என்ற பாரதியாரின் முழக்கம் வள்ளுவர் கருத்தின் எதிரொலியே.

அல்லற்பட்டு ஆற்றுது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

இந்தக் குறளின் விரிவுரைதானே இன்று உலகமெங்கும் தோன்றியுள்ள பாட்டாளிவர்க்கப் போராட்டம்?

உழவரே உலகத்தாருக்கு ஆணி என்று ஆணித்தரமாக அன்று கூறியதை இன்றும்தான் அலட்சியப்படுத்த முடிகிறதா? உழவர் மன்னர்களின் குடை நிழல்களையும் தம் குடையின்கீழ்க் காணவல்லவர் என்ற கருத்துக்களின் மூலம் உழவுத்தொழில்புரியும் பாட்டாளிகளின் வலிமையை, பெருமையை, அவர்களிடம் மண்டிக்கிடக்கும் மாபெரும் சக்தியைப் பிரகடனப்படுத்துகிறார்.

மூடநம்பிக்கை:—

மூடப் பழக்கவழக்கங்களுக்கு வள்ளுவர் முதல் விரோதி. மடமையை மண்டையிலடித்து நொறுக்குகிறார். கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போகவேண்டுமென்று முழங்குகிறார். உண்மையை மறந்து வேடங்களில் மயங்குபவர்களுக்கு விடுத்த எச்சரிக்கைகள் பல.

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

மனதில் தீய குணங்களை வைத்துக்கொண்டு நாள் தவருமல் தண்ணீரில் மூழ்கி, ஆச்சாரமாகப் பாவனை செய்துகொண்டு உலகினை ஏமாற்றும் பாவனைப் பேர்வழிகளின் போலித்திரையைக் கிழித்து எறிகிருர். இம்மட்டோடு விடவில்லை; இறைவனை அடைவதற்கு வெளி வேடங்களே தேவையில்லை. மொட்டை அடித்துக்கொள்வதும் சடை முடிகளை வளர்த்துக் கொள்வதும் வெறும் வித்தை என்று கூறுகிருர்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்

முற்போக்குக் கருத்துக் குவியல்களை அள்ளிக்கொட்டும் இதே வள்ளுவரைத்தான், இதே புத்துலகச் சிற்பியைத்தான், பகுத்தறிவு முரசு கொட்டிப் புரட்சிக்கொடி உயர்த்திய இதே குறளாசிரியரைத்தான் ஒரு நவீன சாமியாராக மக்களுக்கு அறிமுகம்செய்கிறது பிற்போக்குக் கும்பல்.

கடவுள்:—

வள்ளுவர் இறைவனைப் பற்றிப் பேசுகையில், உலகிற்கு ஆதியாக, முதல் பொருளாக ஒன்று உண்டு என்று ஒத்துக் கொள்கிருர். இறைவனைப்பற்றி விவரிக்கும்பொழுது ஒப்பற்ற, உயர்ந்த, நல்ல ஒழுக்கங்களையே அடுக்கிக் காண்பிக்கிருர். இறைவனைப்பற்றிய இன்றையக் கொள்கைகளையும் நாட்டில் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் கண்முன் நிறுத்திக்கொண்டு திருக்குறளை நோக்கும் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனியவேண்டும். இறைவனுக்கு விரும்பியவாறெல்லாம் இலக்கணம் கற்பித்து கூத்த

டிக்கின்றவர்கள் அத்தனைபேரும் வள்ளுவர் கொள்கைப்படி இறைவன் என்பதையே உணராதவர்களும், வழிபடாதவர்களுமாவார்கள். கடவுள் உண்டா இல்லையா என்ற விவாதத்தில் தற்போது வள்ளுவர் பெயர் வெகு தாராளமாக அடிபட்டுவருகிறது. கடவுள் உண்டா இல்லையா என்று மண்டையை உடைத்துக்கொள்ளும் வீண்வேலையில் வள்ளுவர் இறங்கவில்லை. அறிவு, அறம், அன்பு இவைகளே கடவுட் கொள்கைகள் என்பது வள்ளுவர் முடிவு. இதை மறந்துவிட்டு ஆத்திகத்திற்கும், நாத்திகத்திற்கும் குறளில் ஆதாரங்கள் தேடுவதும், வள்ளுவரை அதற்கு சாட்சியாகக்கொண்டு வந்து நிறுத்த முற்படுவதும் கூடா. வள்ளுவர் இந்த இரு கூட்டத்தாரின் கருத்துக்கும் கற்பனைக்கும் முழுக்க முழுக்க வேறுபட்டவர்.

இல்லாமை ஏன் ?

ஆண்டான், அடிமை, இருப்பவன் இல்லாதவன் இவை போன்ற ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பின் கொடுமையே வறுமைக்குக் காரணமென்கிறார் வள்ளுவர். இதோடு நின்றுவிடவில்லை. கோளாறான அமைப்புக்கே ஒரு முடிவு கட்டவேண்டுமென்று ஆத்திரத்தோடு குமுறுகிறார்.

பிச்சை எடுத்தும், துன்பப்பட்டும்தான் ஒருவன் வாழவேண்டுமானால் அப்படிப்பட்ட நிலை, அல்லது அமைப்பு ஏற்படுவதற்கு யார் யார் காரணமானவர்களோ அவர்கள் அழியட்டும்; இல்லை, ஒழிக்கப்படவேண்டுமென்று அறுதியிட்டுக் கூறுகிறார். இதோடு திருப்தியடைந்துவிடவில்லை; கோளாறான அமைப்புக்குக் காரணமானவர்கள் அந்தக் கொடுமைக்கே பலியாகவேண்டுமென்று அறைகூவுகிறார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

உலகு இயற்றியான் என்பது நாடாளும் முறைகளை வகுத்துக்காட்டும் சட்ட நூல்களைக் குறிப்பதாகும். அரசியல் சாத்திரப்படி அரசியல் அமைப்பு என்று கூறலாம். இல்லை உலகு இயற்றியான் என்பது கடவுளைத்தான் குறிப்பதாகும் என்றாலும் கவலைப்படவேண்டியதில்லை. ஏற்றத் தாழ்வுகளுக்கும் அதைத் தொடர்ந்து வரும் இல்லாமைக்கும் கடவுளே காரணமானாலும் சரி, அந்தப் பட்சபாதமுள்ள கடவுளும் ஒழியவேண்டியவர்தான். இல்லையென்ற சொல்லே இல்லாமல் போகவேண்டும். இல்லாமைக்கு யார் காரணமோ அவர்களும் இருக்கக்கூடாது. இதுவே வள்ளுவர் விருப்பம்.

கூழுக்கு ஒருவன் அழும்படி ஆண்டிடும்
கோலை முறித்திடுவோம்

என்ற பாரதிதாசன் வாக்கு வள்ளுவரின் இந்தக் கருத்துக்குச் சரியான விளக்கம் தருகிறது.

வாழ்க்கையில் புரட்சி

வாழ்க்கை வாழ்வதற்கே. இதுவே வள்ளுவர் குறிக்கோள். இகத்தைவிட்டுப் பரத்தைக் குறித்துத் தம்பட்டமடிக்கும் தத்துவத்தைக் குறள் தட்டி நொறுக்குகிறது. இறப்பதற்குத்தான் நாம் பிறந்திருக்கிறோமே தவிர, வாழ்வதற்காகப் பிறக்கவில்லை என்ற அசட்டுத்தனத்திற்குச் சரியான ஆப்புவைக்கிறது. இங்கு வாழவேண்டும்; அதுவும் இன்ப வாழ்வாக இருக்கவேண்டும். உலகத்தில் உயர்வு பெற வாழவேண்டுமென்ற உணர்ச்சி ஒவ்வொருவரையும் உந்தித்தள்ளவேண்டு மென்பதே வள்ளுவர் வேட்கை. உன்னதமான சமுதாயம் உருவாக மக்கள் பின்பற்றவேண்டிய கொள்கைகள் பல உள்ளன. அந்த அடிப்படைக் கொள்கைகளை அலட்சியப்படுத்தினால் அவர்களும், சமுதாயமும் மேன்மையுற முடியாதென்பதை வள்ளுவர் தமது வாழ்க்கையின் மூலமே உணர்த்தியுள்ளார். வள்ளுவரின் வாழ்க்கைப்போக்கே புரட்சிகரமானது. அவரது வாழ்க்கையின் விளக்கமே குறள்.

முயற்சிக்கு முதலிடம்: —

நமது வாழ்க்கையில் எடுத்ததற்கெல்லாம் ஒரு தத்துவம் வந்து புகுந்துவிடுகிறது. தத்துவங்களில் நமக்கு சக்கை மிச்சம்; மற்றைய நாட்டினருக்கு சாரம் லாபம். பிறநாட்டினரிடம் சலிக்காத பயன்படு முயற்சி. நம்மிடம்

சளைக்காத பேச்சு. நம்மால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை. எல்லாம் காலம்வந்தால் தானுக நடக்கும் என்ற பிதற்றலுக்கு நம் நாட்டில் பஞ்சமில்லை. அதிர்ஷ்டத்தை நம்பி முயற்சியை நழுவவிடும் நாசகரமான போக்கைத் தமது முழு வலிமையுடன் எதிர்க்கிருர் வள்ளுவர்.

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

முயற்சி செய்யுங்கள்; இல்லையேல் இகழ்ச்சியுறுவீர்கள் என்று எச்சரிக்கிருர். தெய்வம் என்ற மகத்தான சக்தியால் சாதிக்கமுடியாத காரியத்தைக்கூட முயற்சியின் முதிர்ச்சியால் முடிக்கமுடியுமென்று முழங்குகிருர். முயற்சி மெய் வருத்தக் கூலிதரும். முயற்சி எவ்வளவுக் கெவ்வளவு வலுப்பெறுகிறதோ அந்தளவுக்கு வாழ்க்கை வெற்றி பெறும். முயற்சி திருவினையாக்கும். முயற்சியில்லாவிட்டால் இன்மை புகுத்தப்படுவீர் என்று எச்சரிக்கிருர்.

அறிவே ஆதாரம்:—

வாழ்க்கை வளம்பெற அறிவு வளரவேண்டும். அறிவு ஆக்கம் பெற்ருல் இன்பம் பெருகும். அறியாமை ஓங்கினுல் இருள்தான் கவியும். அபிவிருத்திகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது அறிவு. அறிவு முன்னேற்றமே ஒரு நாட்டிற்குப் புத்துயிரளிக்க முடியும், சமுதாயத்தைச் சீரழிவினின்று பாதுகாக்கவும் இயலும். அறிவு வளத்தைப் பொறுத்ததே அபிவிருத்தி. இதனுல்தான் வள்ளுவர் அறிவின் அவசியத்தை மிக மிக அழுத்தமாக வற்புறுத்துகிருர்.

அறிவுஉடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

ஒவ்வொருவரும் நன்ருகச் சிந்திக்கப் பழகவேண்டும். சிந்திப்பதுதான் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரம்; முன்னேற்றத்தின் முதற்படி. சிந்தனசக்தி வளர்ந்தால்தான் அறிவு விளக்கம்பெற முடியும். ஆனல் ஒருவரும் சிந்திக்கப் பழகுவதில்லை. சிந்திப்பது கடினமாகவே இருக்கிறது. அப்படியானல் சிந்திப்பது முடியாத காரியமா? இல்லை. முடிம்; இயற்கையான செயலுங்கூட. நல்லதா, தீயதா என்ற விளைவுகளைத் தெரிந்துகொள்ளச் சிந்திக்கப் பழக வேண்டும். அப்பொழுதுதன் அறிவுத்துறையில் மறுமலர்ச்சியைக் காணமுடியும். சிந்தனசக்தி யில்லாது பகுத்தறிவுக்குப் பஞ்சமேற்பட்டால் அந்த நாட்டு மக்களுக்கு உயர்வும் மேன்மையும் எட்டாக் கனிதாம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்று வற்புறுத்துகிருர்.

ஊக்கமே ஆக்கம்:—

வாழ்வின் வளத்திற்கு வித்தாக விளங்கும் ஊக்கம், உறுதி, உழைப்பு, தன்னம்பிக்கை, தைரியம், முயற்சி, ஒழுக்கம் போன்ற கொள்கைகள் குறளில் கொட்டுமுழக்கத்துடன் கொம்மாளங் கொட்டுகின்றன. வாழ்வுப்பாதையைச் செப்பனிட்டுத்தருகின்றன. வாழ்வில் ஊக்கமும் உறுதியும் இல்லாவிட்டால் எது இருந்துதான் என்ன பயன்? ஊக்கமின்றேல் ஆக்கமில்லை.

உடைய ரெனப்படுவது ஊக்கம்அஃ தில்லார்
உடையது உடையரோ மற்று.

ஊக்கத்திற்கு ஆக்கமளிப்பது உறுதி. உள்ளத்தில் உறுதியிருந்தால் உயர்வு தேடிவரும். உறுதியற்ற உதிரித் தனம் ஊதாரித்தனத்திற்குத்தான் உற்சாகமூட்டும். மனிதன் நினைத்தபடி ஆகமுடியும். அதற்கு வேண்டியது உறுதியான மனப்பான்மை, அசைக்க முடியாத நம்பிக்கை.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

இந்தக் குறளின் விளக்கவுரை எனலாம் எமர்சன் எழுதியுள்ள "தன்னம்பிக்கை" எனும் புகழ்பெற்ற நூல்.

தன்னம்பிக்கை கொள்ளுங்கள். நம்மால் ஆவது என்ன என்று முழங்காலைக் கட்டிக்கொண்டு பிலாக்கணம் பாடாதீர்கள். உங்களிடம் மகத்தான சக்தி குடிகொண்டிருக்கிறது. வாருங்கள் வெளியே; உழையுங்கள். உழைப்பால் உயர்ந்தோர் பலர். உங்கள் உழைப்பு உங்களுக்கு உயர்வைக் கொடுக்கும். உங்கள் உழைப்புக்கு முன் 'ஊழ்' தலைவணங்கும் என்று உற்சாகமூட்டுவதை எவர்தான் உதாசீனப்படுத்தமுடியும்? இதுவே வறுமையைத் தூள் தூளாக்கும் சம்மட்டி.

ஊழையும் உப்பக்கம் காண்பார் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

என்று மக்கள் மேன்மைக்கு ஊக்கத்துடன் கூடிய உழைப்பு வேண்டும், அதுவே ஆக்கத்தைத் தேடித்தர முடியுமென்று பறைசாற்றுகிறார்.

மானமே பெரிது:—

மானம் மனிதனின் உயிர்நாடி; தன்மானத்துடன் வாழவேண்டும். இல்லையேல் மனிதர் என்ற பெயருக்கே பொருத்தமில்லை. உயிரினும் மானம் பெரிதென நினைப்பவன் தமிழன். தன்மானமுள்ள மனிதனாக வாழ்வதே வாழ்க்கையில் சுவை மிகுந்தது. உயிரைவிட்டு மானத்தைக் காப்பாற்று என்பது வள்ளுவர் செய்தி. சமத்துவமில்லாத மனப்பான்மையை மாற்றியேதீரவேண்டுமென்று போர்தட்டுகிறார். பிறரைவிடத் தான் உயர்ந்தவன் என்று இறுமாப்புடன் நடப்பவனை உங்கள் பகைவன் என்று கருதுங்கள் என்கிறார். அவனது திமிரைத் தவிடு பொடியாக்குங்கள் என்று கூவுகிறார். எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம் என்று கூறிவிடுவதோடு திருப்தியடைந்துவிடவில்லை வள்ளுவர். அந்த சமத்துவ நிலையை நிலைநாட்டக் கச்சைகட்டி வாருங்கள் என்று அழைக்கிறார். அந்த முயற்சியில் தங்களைப் பலியிடவும் தயங்கக்கூடாதென்கிறார். சமத்துவத்தை நிலைநிறுத்தத், தாழ்வு நிலையைத் தகர்க்க உங்கள் உயிரைக் காணிக்கையாக்கவும் கலங்காதீர் என்கிறார். தாழ்வாக மதிப்பவரிடம் தன்மானத்தைவிட்டு அவர்பின்சென்று வாழ்வதைவிட மாண்டு மடிவதே மேல் என்று முழங்குகிறார்.

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

மக்களை மக்களாக மதித்துப் பழகும் பண்பில்லாதவர்கள் யாராக இருந்தாலும் சரியே அதுபற்றி அக்கறை இல்லை. சமத்துவமாகநடக்கத் தெரியாதவனை "மரம்"

ஒன்றுதான் கூறுவேன் என்று கோபுர உச்சியிலிருந்து கூவுகிறார்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

ஏற்ற வாழ்வு எது?

எடுத்த எடுப்பிலே இல்வாழ்வே ஏற்றமுடையதென் கிறார். எல்லோரும் வேண்டுவது இன்பம். இன்பம்பெற எங்கும் செல்லவேண்டுவதில்லை. வீட்டில் காதல் மனைவியிடத்தில், அவளோடு கூடி வாழ்தலில் பெறமுடியு மென்று அறுதியிட்டுக் கூறுகின்றார். ஆணும் பெண்ணும் கூடிவாழ்தலே வாழ்க்கை. இல்வாழ்க்கையே முழு இன்பம் பயக்க வல்லது என்கிறார். இல்வாழ்க்கைக்குப் பெண்மணி தேவை. ஆனால் அவள் நல்லவளாக இருக்கவேண்டும். ஒரு லட்சிய மனைவிக்குரிய லட்சணங்களை வள்ளுவர் குறிப் பிடாமல் இல்லை. அந்த லட்சியப் பெண்ணை ஒருவன் அடைந்துவிட்டால் அவனுக்கு வேறு என்ன வேண்டு மென்கிறார். இல்லவள் மாண்பானல் இல்லாதது யாது? எல்லா முண்டு. இதனல்தான் “பெண்ணிற் பெருந்தக்க யாவுள” என்று கூறிப் பெருமைப்படுகிறார்.

துணைவனோடு வாழ்க்கை நடத்தும் துணைவிக்குக் கல்வி வேண்டும். இல்லையேல் வாழ்வு வெற்றிபெற முடியாது என்பது வள்ளுவர் முடிவு.

ஒத்த கல்வி, ஒத்த அன்பு:—

கணவனுக்கும் மனைவிக்கும் சமமான கல்வியும், அன் பும் வேண்டுமென்கிறார் நக்கீரர். தற்கொண்டான் வளத்தக் கான் வாழ்க்கைத் துணை, என்கிறார் வள்ளுவர். இதன் மூலம் துணைவிக்குப் பொருளாதார அறிவு வேண்டுமென்று

தெளிவுபடுத்துகிறார். இல்வாழ்வு அன்பும் அறனும் உடையதாக இருக்கவேண்டும். அறத்தாறு வாழவேண்டும். அவன் வாழ்வாங்கு வாழ்வான். வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான் என்று பூரிப்போடு கூறுகிறார்.

ஒருவனுக்கு அன்பொத்த மனைவி அறிவறிந்த மக்கள் அன்புடைமை இவைகள் இருந்தால் போதுமா? வீட்டு வாழ்க்கையைக் கூறிய வள்ளுவர் வெளி வாழ்க்கையை வகுக்கத் தவறவில்லை. செய்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கம், ஒழுக்கம், பொறுமை, வெஃகாமை, புறங்கூறாமை முதலிய பல வழிகளை நமது வெளி வாழ்க்கை முறைக்கு வகுத்திருக்கிறார்.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

இந்தக் குறள் ஒன்றே போதும் நமது வாழ்க்கைக்கு. புகழ் தானே வரும். உலகம் இன்ப உலகமாகவேண்டும்; இதுவே வள்ளுவர் விருப்பம். இதுதான் தமிழர்களது சமுதாயச் சட்டம்; தமிழனது குடிவாழ்க்கை முறை.

காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா என்று பிதற்றிக்கொண்டு, பாட்டின் உண்மைக் கருத்தை உணராது மேம்போக்கில், மண், பெண், பொன் ஆசை கூடாதென்ற வறட்டுக் கூச்சலுக்கு சரியான ஆப்பு வைக்கிறார். இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் பொருள்தேவை. அதைப்பெற எல்லோரும் முழு மூச்சுடன் முனையவேண்டுமென்று முழங்குகிறார். வறட்டுத் தத்துவங்களில் தடுக்கிவிழுந்து நடைமுறை வாழ்க்கையை நாசமாக்கவேண்டாமென்று வற்புறுத்துகிறார்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்.

உறுதியோடும் ஊக்கத்துடனும் முயற்சியிலீடுபடுங்கள். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளைத் தேடுங்கள் என்கிறார். இல்லாரை எல்லோரும் எள்ளுவார் என்று எச்சரிக்கிறார். தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ்வு நடத்தப் பொருள் ஈட்டுங்கள்; அந்த முயற்சிதான் உங்கள் எதிரிகளின் இறுமாப்பை ஒடுக்குமென்று ஆத்திரத்துடன் கூறுகிறார். வள்ளுவர் கூறும் இப்பண்புகளை வளர்க்கும் எந்த சமுதாயத்திலும் இன்பவாழ்வு பொங்கும். வாழ்வாங்கு வாழும் வகையில் வாழ்க்கை அமையும்.

முடிவுரை

திருவள்ளுவர் அழுக்கடைந்த அமைப்புக்களைச் சீர் செய்ய முனைந்தார்; திரிந்துபோன முறைகளைத் திருத்தி அமைக்க முற்பட்டார்; தேய்ந்த தத்துவங்களுக்கு உரம் ஊட்டினார்; குனிந்த உள்ளத்தையும் கூனிப்போன கொள்கையையும் நிமிரச்செய்தார். பழமையின் இருள் அகல வேண்டும், புதிய ஒளி பரவவேண்டுமென்று பாடுபட்டார். திருவள்ளுவர் தந்த வள்ளுவம் சமயத்துறையைத் தாண்டி சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் புகுந்தது. அதனால்தான் மறுமலர்ச்சியைப் புரட்சித்தன்மை பொருந்தியதென்கிறோம்.

புதிய நோக்கும் போக்கும் சமுதாயத்தில் மறுமலர்ச்சி பெற வேண்டுமென்பதே குறளின் கொள்கை. மனிதன் மனிதனாக வாழவேண்டுமென்பதே குறளின் கோட்பாடு. புதிய சமுதாயம் தோன்ற, புதிய பார்வை, புதியவழி தேவை என்பதைக் குறள் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது. இந்தக் கோணத்திலிருந்து குறளைப் பார்க்கும் பொழுது வள்ளுவர் மகா மேதையாகவும், மக்கள் கவியாகவும், புரட்சிக்காரராகவும் தோன்றுகிறார்.

புரட்சிக்காரர்கள் பலர் தோன்றி மறைந்தனர். அவர்களது கொள்கைகள் பலவும் கையாளப்பட்டுக் காரியசாத்தியப்பரீட்சைகளும் செய்யப்பட்டுள்ளன. அவைகள் எல்லாம்

ஒரு தரப்பட்டவைகளே. ஒரு துறையைச் சார்ந்தவையே. சகலதுறைகளிலும் புரட்சிகரத் தன்மையைப் புகுத்தியவர் வள்ளுவர் ஒருவரே. அவர்காட்டும் வழிகளே திருத்தப்பட்டும், மாற்றப்பட்டும் "புரட்சி" என்ற பெயரால் பேசப்படுகின்றன அல்லது கையாளப்படுகின்றன. ஆனால் அவைகள் செயல்படும்பொழுது வள்ளுவர் வழியைத்தான் பின்பற்ற வேண்டிய நிலைமைக்கு வந்துள்ளன என்பதை இன்று கண்கூடாகக் காண்கிறோம். வாழ்க வள்ளுவர்! வளர்க வள்ளுவம்!! என்று வையகமே தலைவணங்கும் ஒரு நிலையை உண்டாக்கிவிட்டது வள்ளுவர் வழி.

ஒவ்வொரு இளைஞரும்

அவசியம் படிக்கவேண்டிய புத்தகம்.

"சொந்தத் தொழில்"

(ஆர். தயாநிதி எழுதியது) ★ விலை ரூபாய் 1—8—0.

தொழிலுக்கு வந்தனை செய்யவேண்டும் என்றார் புரட்சிக் கவிஞர் பாரதியார். சொந்தமாகத் தொழில் செய்யச் சிந்தனையைத் தூண்டிவிடுவது இந்நூல். **ஜீவனோபாயப் பிரச்சினையை அலசி ஆராய்வதுடன், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், பொருளாதார உயர்வைப் பெறவும் வழிகோலுகிறது.**

எப்படி விருப்பமுடைய ஒவ்வொருவரும் தொழில் செய்யமுடியும்? பள்ளியை விட்டதும் வேலையா? தொழிலா? எப்படி ஒருவர் சுதந்திரமான ஜீவனோபாய மார்க்கத்தைப் பெறமுடியும்? அளவில்லாமல் பொருள் ஈட்டலாம் என்ற கேள்விகளுக்கு பதிலளித்துத், தொழில் வாழ்க்கை இவைகளின் வெற்றியின் நுட்பங்களைத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரி தொழில்துறை முதன்மை விரிவுரையாளர் திரு. **B. கோபாலன்** B.A., M.Com., அவர்களின் அணிந்துரையுடன் கூடியது.

கஸ்தூரி பதிப்பகம், உறையூர், திருச்சிராப்பள்ளி.

பிறர் கண்ணோட்டம் * * * * * * * * * *

"சொந்தத் தொழில்"

இலங்கை, "வீரகேசரி" கூறுகிறது: வேலையில்லாத் திண்டாட்டம் வர வர அதிகரித்துவருகிறது. வேலை கிடைத்தவர்களில் பலர் திருப்தியின்றி ஏதோ அடிமை வாழ்வு வாழ்ந்து "கூலிக்கு மாரடிக்கிறார்கள்." சம்பளத் தொழில் வாழ்க்கையில் உற்சாகமில்லாமல் செய்கின்றது.

இதைப் போக்கி, ஒவ்வொருவரும் சொந்தத்தில் தொழில் செய்யலாமென்றும், தன்னம்பிக்கை, பொறுமை, ஊக்கம், நிதான புத்தி முதலியவை இருந்தால் சொற்ப முதலுடன், சுயமாகத் தொழில் செய்து சுயேட்சையாக, அடிமையற்ற சந்தோஷ வாழ்வு வாழலாம் என்றும் ஆசிரியர் வழிகாட்டிப் பலருக்கும் நம்பிக்கை யளிக்கின்றார். தொழில் நடத்த 'அதிர்ஷ்டம் வேண்டும்' என்ற எண்ணம் ஆதாரமற்றதென்கிறார். சொந்தத் தொழில் எப்படித் தெரிவு செய்வது? அதை வெற்றிகரமாக நடத்த வழி வகைகள் என்ன? என்னென்ன தொழில்களை சுலபமாகச் செய்யலாம்? என்பது பற்றிக் கூறும் இப் புத்தகம் இக் காலத்தில் பலருக்கும் பெரும் உதவியாகவும், சுதந்தர வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டும் வழிகாட்டியாகவும் இருக்கும். புத்தகத்தைப் படிக்க எடுத்ததும், முடிக்கும் வரை அதைக் கீழே வைக்க மனமில்லை. **இந்நூலை வெளியிட்ட இதன் ஆசிரியர் நாட்டுக்கும், தமிழ் சமூகத்திற்கும் மேலான வழி காட்டுகிறார்.**

"NEW LEADER" கூறுகிறது:

Unemployment as it prevails all over the country to-day is certainly one of the pressing problems confronting the Government despite attempts made by them to tackle it successfully through their various Schemes and Plans in this direction. It has to be admitted on all hands that no lasting solution has been evolved to solve this problem.

The author has in this book suggested ways and means of overcoming this demon of unemployment ... ... and has given useful tips to start such industries, with the minimum capital and run it efficiently, in accordance with the principles laid down by the Father of the Nation. He has also given hints on tricks of the trade, secrets of successful business and results of increased production. **This is indeed a useful book for the educated and uneducated youth of this country.**

"கலைமகள்" கூறுகிறது: பல விஷயங்களை விவரமாய்க் கூறுகிறது இந்நூல். தொழில்களை நடத்துவதில் உள்ள சிரமங்களையும், வெற்றி அடையும் வழிகளையும் ஆசிரியர் விளக்கி இருக்கிறார்.

தொழில் செய்வது எப்படி?

(திரு. ஆர். தயாநிதி எழுதியது)

விலை ரூ. 1—4—0.

★

தொழிலைப் பற்றிப் பேசுவது எளிது, செய்வது கடினம். இது சாதாரணமாக முடியாது என்பது ஒரு பரவலான எண்ணம். தொழில் முறைகளை எல்லோரும் பயிலலாம்; எவரும் கையாளலாம். சிந்திக்கும் ஒவ்வொருவரும் செய்து பயனடையலாம்.

தொழில் அம்சங்களான முதலீடு,
கொள்முதல், விற்பனை, வியாபாரக் கணக்குகள்,
விளம்பரம் முதலியவைகளைத் தெளிவாக எல்லோரும்
இலகுவில் புரிந்துகொண்டு பயனடையும் வண்ணம்
அனுபவ சாத்தியமான வழிகளைக் காட்டும்
கைத்துணை நூல்.

★

அணிந்துரையில், திருச்சி வர்த்தகர் சங்கத் தலைவரும்,
பிரபல எழுத்தாளருமான

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

கூறுகிறார் :

"வணிகத்தை நன்ருக நடத்த விரும்பும் எவர்க்கும் இந்நூல் துணை செய்யும். இந்நூலைப் படித்த எவரும் ஒரு நல்ல வணிகத்தைத் திறமையாகச் செய்து வெற்றி பெறலாம் ....இந்நூலைப் பெரிதும் பயன்படுத்திப் பலனடைய வேண்டுமென்று விரும்புகின்றேன்.

உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்.

கஸ்தூரி பதிப்பகம்,

உறையூர், திருச்சி.

மாலைப் பாக்கள்

(புலவர் எம். பி. மாஸ்கரேனஸ் இசைத்தது)

விலை ரூ. 1—0—0.

★

இனிய தமிழில் சிறந்த கருத்துக்களைக் கொண்ட பாக்களின் தொகுப்பு நூல். எளிமையும், புதுமைப் பண்பும் பொலியப் பெற்றது. இறைவன் துதிப் பாக்கள், தோத்திரப் பாக்கள், சந்திரன், சேவல், பசு பற்றிய வாழ்த்துப் பாக்கள் முதலியன அழகிய உருவப் படங்களுடனும், நூல் அழகிய மூவர்ண மேலட்டையுடனும் மிளிர்கின்றன.

சிறப்பாகத் தமிழன்பர் இல்லத்தையும், உள்ளத்தையும் அலங்கரிக்கவேண்டிய நூல்.

—"தாய்நாடு"

முப்பத்துமூன்று தலைப்பில் நல்ல கருத்துக்களை வைத்து யாத்திருக்கும் இந்தத் தொகுப்பு மிக மிகப் பயனுடையது. அனுபவமும், அறிவாற்றலும், சிறந்த புலமையும் உள்ள அறிஞரின் நெஞ்ச மணிக் குளத்தில் தேடி எடுத்த முத்துக்கள் இந்நூலில் காணப்படும் கவிதைகள்.

— "சிவாஜி"

படிக்கப் படிக்கத் தெவிட்டாத கவிதைகளைக் கொண்டது இந்நூல். இலக்கிய ஆர்வமுள்ள அனைவரும் படித்து இன்பமுற ஏற்ற நூல்.

கஸ்தூரி பதிப்பகம்,

உறையூர், திருச்சிராப்பள்ளி.

புதிய புத்தகங்கள்.

மாதவனும் துளவ வைத்தியமும் விலை அணா 0—8—0

டாக்டர் எம். வீராசாமி நாயுடு (ரிடயர்டு சப்-அஸிஸ்டெண்ட் சர்ஜன்) **எழுதியது.** வைஷ்ணவ சம்பிரதாய ரீதியாய்த் துளசிச் செடியின் பண்புகளைப்பற்றி ஆராய்ந்து எழுதப்பட்டது. இந்நூல், துளசியின் மகிமைகளைப் போற்றிய வரலாறும், வைத்திய உபயோகங்களும் நிரம்பியது. குழந்தைப் பராமரிப்புடைய ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படித்து அறியவேண்டிய நூல்.

திருச்சிராப்பள்ளி விலை அணா 0—4—0

(**ரா. வை. எழுதியது**) இது திருச்சிராப்பள்ளியைப்பற்றிய சரித்திர ஆராய்ச்சி நூல். திருச்சியின் வரலாற்றைத் தெளிவாகக் கூறும் இந்நூல், தென்னிந்திய நகரங்கள் என்ற வரிசையில் வெளியாகும் முதல் நூல்.

கனவும் காதலும் விலை அணா 0—3—0

பத்திரிகைகள் பலவற்றாலும் பாராட்டப்பெற்றுள்ள இச் சிறுகதை, சிறந்த தமிழ் நடையில் இயன்று முற்போக்குக் கருத்துக்களுடன் விளங்குகிறது.

தம்பித் தமிழ் வாய்ப்பாடு விலை அணா 0—2—0

வாய்ப்பாட்டுப் புத்தகங்களில் ஒரு நவீனம். சிறுவர்களுக்கு ஏற்ற பாடங்களுடன், பெருக்கல், (இரு முறை) பின்ன வாய்ப்பாடுகள், அளவைகள் மற்றும் அநேக விஷயங்களைக்கொண்டது. அழகிய இரு வர்ண அட்டை. 36 பக்கங்கள்.

உங்கள் தேவைக்கு எழுதுங்கள்!

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு. (தபால் செலவு தனி)

கஸ்தூரி பதிப்பகம்,

உறையூர், :: திருச்சிராப்பள்ளி.